பக்கங்கள்: 9

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை | 01.10.2023 | கதிர் 324

# வருமான வீழ்ச்சியால் கடும் சமூக அழுத்தம்

## நாணய நிதியம் தெரிவிப்பு

வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினால், நாட்டு மக்கள் மத்தியில் கடுமையான சமூக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் 2023 - செப்டம்பர் - பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கை'யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பணவீக்கத்தை மட்டுப்படுத்துதல், நாணய மாற்று விகிதங்களை ஸ்திரப்படுத்துதல், இலங்கை மத்திய வங்கியின் இருப்புகளை மீள கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன் பொருளாதார ஸ்திரப்படுத்தலில் தற்காலிக முன்னேற்றங்கள் இருந்த போதிலும், இந்த நிலை ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போதைக்கு விசுவாசமாகவும் நெருக்கமாகவும் இருக்கக்கூடியவரான நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா புதிய கூட்டணி ஒன்றைத் தொடங்குவதற்கான முன்னேற்பாடாக ராஜகிரியவில் ஒரு அலுவலகத்தைத் திறந்துள்ளார். இந்த அலுவலகம் ஏற்கனவே இயங்கி வருகின்றது என்றாலும் இப்போது அது பகிரங்கமாக மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்காகச் செயற்படும் என்று நிமல் லன்ஸா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் உறுப்பினர்களை ஒன்று திரட்டி புதிய கூட்டணியை மிகப் பெரியளவில் உருவாக்குவதற்காகத் தனது அணியினர் ☞ 2

# நீதிபதிக்கு தொல்லை கொடுக்கக்கூடாது

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

நீதித்துறைக்கு பங்கம் ஏற்படும் விதத்தில் யாராவது நடந்து கொண்டால் உடனடியாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர நீதிபதிக்கு தொல்லைகள் கொடுக்கக்கூடாது

என தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். ☞ 2

# முல்லை நீதிபதியின் பதவி துறப்பு; முழுமையான விசாரணை தேவை

## சட்டத்தரணிகள் கூட்டமைப்பு வேண்டுகோள்

சுதந்திரம் மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதி செய்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தனது பதவியை இராஜினாமா செய்தமை குறித்து முழுமையான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் சட்டத்தரணிகள் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து அக்கூட்டமைப்பின் அங்கத்தவர்களும் ஜனாதிபதி சட்டத்தரணிகளாவர்களுமான, ரியென்சி அர்செகுலரத்ன, உபுல் ஜயசூரிய, ஜயம்பதி விக்கிரமரட்ன, ஜெப்ரி அழகரட்ணம், டானியல் பிலிப்ஸ், துலிந்திர வீரசூரிய, அருண மிட்டிகொட, சாலிய பீரிஸ், எஸ்.ரி.ஜெயநக, உட்பட சட்டத்தரணிகளான உபுல் குமரப்பெரும, கே.வி.ஜயரஞ்சன ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரவிக்கப்பட்டுள்ளதாவது: ☞ 2

# அவதூறு மற்றும் வெறுப்புப் பேச்சிலிருந்து காக்கவே நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம்

## இப்படிச் சொல்கிறார் நீதி அமைச்சர்

தனிமனித தாக்குதல்களையும், அவதூறு பரப்பல், வெறுப்புப் பேச்சுக்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்டவற்றிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காகவே நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தினை அமுலாக்குவதன் நோக்கமாகும் என்று நீதி அமைச்சர் விஜதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்நிலைக் காப்புச் சட்டமானது, சமூக ஊடகங்களைகட்டுப்படுத்துவதற்காககொண்டுவரப்படவில்லை. தனிமனித உரிமைகளைத் ☞ 2

# நாமலுக்கு இன்னும் வயதுள்ளது எந்தத் தேர்தலுக்கும் நாம் தயார்

## மஹிந்த மீண்டும் அறிவிப்பு

நாமல்ராஜபக்ஷவுக்கு இன்னமும் வயதுள்ள நிலையில் நாம் எந்த தேர்தலை முகங்கொடுப்பதற்கும் தயாராக உள்ளோம். அதில் வெற்றியும் பெறுவோம் என்று மீண்டும் பொதுஜனபெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

கொழும்பு 7இல் உள்ளதர்மாயத்தனவுக்கு நேற்றையதினம்விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எல்லே குணவன்ச தேரரைச் சந்தித்து ☞ 2

# மின் கட்டணத்தை அலகுக்கு ரூ. 8 அதிகரிக்க மின்சார சபை திட்டம்

மின்சாரக் கட்டணத்தினை 22சதவீதம் அல்லது அனைத்து அலகுகளுக்கும் 8ரூபா அதிகரிப்பு செய்யப்பட வேண்டுமென இலங்கை மின்சாரசபை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவினை கோரியுள்ளது.

இலங்கை மின்சார சபை கோரியுள்ள புதிய கட்டணத் திருத்தத்திற்கு அமைவாக, 0-30 அலகுகளுக்குநுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் 80சதவீதத்தால் ☞ 2

# மின் கட்டண உயர்வு பற்றிய தீர்மானம் ஒக். 18க்குப் பின்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 18ஆம் திகதிக்குப்பின்னர்அறிவிக்கப்படவுள்ளதாக என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுல பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அதுகுறித்துஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை மின்சார சபையானது மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. இதற்குஅமைவாக,பொது பயன்பாடுகள் ஆணைக்கு ☞ 2

# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம்: நிபுணத்துவக் கருத்துக்கள் அவசியம்

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

இலங்கைஅரசதனது உத்தேச நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து நிபுணர்களின் கருத்துக்களை பெறுவதுஅவசியமெனஇலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து ஆராய்ந்து வருகையில் தொழில்நுட்பதுறையினர் சிவில் சமூகத்தினர் மற் றும் பலதரப்பட்ட நிபுணர்களின் கருத்தினை உள்வாங்குவது அவசியகும் என்றும்குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச ☞ 2

# உருவாகிறது புதிய அரசியல் முன்னணி

## மைத்திரி நேற்று திடீரென அறிவிப்பு

தேசிய வேலைத் திட்டத்திற்கான புதிய அரசியல் முன்னணியொன்று தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

நாடு தற்போதுள்ள நிலைமையி ☞ 2

## நிகழ்நிலை காப்பு சட்டம் வந்தால்

# கருத்து மற்றும் தகவல் அறியும் சுதந்திரங்களுக்கு கடும் பாதிப்பு

## சர்வதேச சட்ட வல்லுநர்கள் தெரிவிப்பு

இலங்கையில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலமானது அவ்வாறேநடைமுறைப்படுத் தப்பட்டால் கருத்து வெளியிடுதல், தகவல் அறியும் சுதந்திரங்கள் மீதான தாக்குதலாகுமென சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த சட்டமூலம் தொடர்பில் சர்வதேச சட்டவல்லுநர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ☞ 8

# மக்களுக்காக அரசியல்வாதிகள் செய்துள்ள தியாகம்தான் என்ன?

## மகிந்தவிடம் குணவன்ச தேரர் கேள்வி

நாட்டு மக்களுக்காக அரசியல்வாதிகள் செய்துள்ளதியாகம்என்னவென்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம்கேள்விஎழுப்பிய எல்லேகுணவன்சதேரர் அரசியல்தலைவர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கான பணம் யாருடையது என்றும் கோரியுள்ளார்.

கொழும்பு 7இல் உள்ளதர்மாயத்தனவுக்கு நேற்றையதினம்விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்புதொடர்பில்கருத்து வெளியிடும்போதே எல்லே குணவன்ச தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை முன்னேற்றுவதாக கூறி பதவியேற்றவர்கள் தற்போது நாட்டைமீண்டும்நெருக்கடிக்குள்கொண்டுசென்று மீளமுடியாத நிலைக்குள் ☞ 8

# இனங்களுக்கு இடையிலான பிரிவினையே ஆட்சியாளர்களின் இன்றைய எதிர்பார்ப்பு

## ஜேவிபி தலைவர் அனுர தெரிவிப்பு

போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் மக்கள் தேசிய நல்லிணக்கத்தினை எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் அதனை விரும்புவதில்லை. அவர்கள் எப்போது பிரிவினையையே எதிர்பார்க்கின்றார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொலன்நறுவையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் நேற்றையதினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

அண்மைய காலத்தில் முஸ்லிம் மக்கள் தொடர்பிலான விடயங்கள்அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன. ஆனால் தமிழர்கள் தொடர்பான ☞ 8

## இனி இது .....

செயற்படுகின்றனர் என்று புதிய அலுவலகத்தின் பகிரங்கத் திறப்பு விழாவில் நிமல் லன்ஸா தெரிவித்தார்.

இந்த யோசனையின் அடிப்படையில்உண்மையில் லன்ஸாநீண்டகாலமாகவே செயற்படுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சி நலிந்து மெலிந்து இறுதி மூச்சை இழுத்துக்கொண்டிருக்கும் நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ரணிலை நம்பி எவரும் வெளியே வரத் தயாராக இல்லாத நிலையில்,அடுத்தஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி ரணிலுக்கு நேரடியாக ஆதரவு வழங்குவதற்கான வாய்ப்புக்கள்குறைந்துவரும் நிலையில் உதிரிகளாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சிகளில் இருந்து கழன்று வரக்கூடியவர்களையும் (குறிப்பாக மொட்டுக் கட்சியிலிருந்து) ஒன்றிணைத்து ஒரு புதிய கூட்டணியை ரணிலுக்குச் சார்பாக உருவாக்கும் திட்டம் லன்ஸாவிடம் நீண்ட காலத்திற்கு முன்பே வழங்கப்பட்டுவிட்டது.

இதற்காக ஜனாதிபதி அலுவலகத்திலேயே லன்ஸாவுக்கு ஒரு அறையும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரிக்கு வழங்கப்பட இருந்த - முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு என ஒதுக்கப்பட்டிருந்த - அரச இல்லமும் இந்த நோக்கத்திற்காக லன்ஸாவின் அலுவலகமாக இயங்குவதற்கென வழங்கப்பட்டிருந்தது. ஆனால் லன்ஸாவால் அந்தப் பணியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்திருக்கவில்லை.

அவர், மொட்டுக் கட்சியைச் சேர்ந்த 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னுடன் இருக்கின்றனர் என்று தெரிவித்து வந்தாலும் யதார்த்தத்தில் அத்தனை உறுப்பினர்களின் ஆதரவு அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அல்லது அந்தப் பலத்தை அவர் இன்னமும் காண்பிக்கவில்லை.

இந்தநிலையில்தான்லன்ஸா ராஜகிரிய அலுவலகத்தைத் திறந்திருக்கிறார். இப்போதைக்கு அவரது கூட்டணிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது சுதந்திரக் கட்சியும் ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன என்று தெரிகின்றது. இது தொடர்பில் அண்மையில் மைத்திரியின் வீட்டில் ஒரு சந்திப்பும் நடத்தப்பட்டிருக்கின்றது. இதில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர் என்று லன்ஸா தரப்புக் கூறினாலும் அந்நளவு பேர் கூட்டத்திற்கு வருகை தரவில்லை என்கின்றன தகவல் அறிந்த வட்டாரங்கள்.

சுதந்திரக் கட்சி, சுதந்திர மக்கள் சபை, மொட்டுக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து புதிய கூட்டணி ஒன்று உருவாகி வருவதாக மைத்திரிபால சிறிசேன செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்தக் கூட்டணிக்கான முயற்சியாக அமைச்சர்களான விஜயதாச ராஜபக் ஷ, டிரான் அலஸ், முன்னாள் அமைச்சர் குமார வெல்கம, ஆகியோருடனும் தாம் பேச்சுக்களை நடத்தி வருவதாக நிமல் லன்ஸா தெரிவித்திருக்கிறார். இவர்கள் எல்லோரும் ஏற்கனவே ரணிலுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப்பெற்றதன் மூலம் மொட்டுக் கட்சியைவிட்டுத் தூரமாகியிருப்பவர்கள். ஏற்கனவே ரணிலின் நெருக்கமான வளையத்திற்குள் இருப்பவர்கள், ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று விரும்புபவர்கள். எனவே இந்தப் புதிய கூட்டணியில் புதிதாக யாராவது இணைவார்களா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்ரணிலை ஆதரித்து நிற்கக்கூடிய சக்தியாக இப்போதைக்கு வேறு எந்தவொரு அணியும் இல்லை என்கிறநிலையில்இந்தப்புதிய கூட்டணியை விரிவாக்கவும் பலப்படுத்தவும் ரணில் தலைகீழாக நிற்பார் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே. ஆனால், அதன் வெற்றியைச் சாதகமாக்க மொட்டுக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான லன்ஸா சரியான தேர்வா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. அவரால் ரணிலுக்காக எதையாவது சாதிக்க முடிகின்றதா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வருமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாகியுள்ளது.

எரிசக்தித்துறையில் வரித் திருத்தங்கள், செலவை ஈடு செய்வதற்காக முன்வைக்கப்பட்ட விலை நிர்ணயம், நிலுவைத்தொகை நெருக்கடியைத் தீர்க்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்பனவாழ்க்கைச்செலவை உயர்த்தியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியான தட்டுப்பாடு, போராட்டக் காரர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை என்பன பொது மக்களின் அதிருப்திக்கு வழிவகுத் துள்ளது.

ஊழலைக் குறைப்பதில் தெளிவான முன்னேற்றம் இல்லாமையும் பொதுமக்களிடையே அதிருப்தி ஏற்பட முக்கிய கரணியாக உள்ளது.

கடந்த கால முறைகேடுகளுக்கு காரணமான அதிகாரிகள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்காமல், தத்தமது பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றமையும் பொதுமக்கள் கவனம் செலுத்தியுள்ள விடயமாக அமைந்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பலவீனமான பொறுப்புக்கூறல் நிறுவனங்களால் ஊழல் அபாயங்கள் உக்கிரமடைந்துள்ளது. இதனால் இந்த நிறுவனங்களுக்குதங்களது பணிகளை வெற்றிகரமாகநிறைவேற்றும் அதிகாரமோ, தகுதியோ இல்லை.

தவறான நடத்தையைக் கொண்ட அதிகாரிகளை தண்டிக்காததால், பொது நிர்வாகத்துறை மீதான நம்பிக்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அரச கொள்முதல் நடவடிக்கைகளில்ஊழல்இடம் பெறும் அபாயம் காணப்படுகின்றமை, கொள்முதல்செயற்பாடுகளுக்கான விநியோகஸ்தர்களைதெரிவுசெய்வதில் அதிக அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன பொதுமக்களின் விரக்திக்கான காரணங்களாக அமைந்துள்ளன என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என வெளியான தகவல்கள் குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

நீதித்துறையின் சுதந்திரம் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் மீது இந்த விடயம் ஏற்படுத்தக்கூடிய கடும் தாக்கத்தை கருத்தில் கொள்ளும்போது சுதந்திரம் மற்றும்பக்கச்சார்பின்மையை உறுதி செய்வதற்காக இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

வெளிப்படைத்தன்மை மிக முக்கியமானதென நாங்கள் கருதுகின்றோம். இச்சம்பவம் பற்றிய விசாரணை முடிவுகள் குறித்து பொதுமக்களிற்குதாமதமின்றி தெரிவிக்கப்படுவது அவசியமாகும் என்பதை வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

## நாமலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாடினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பொதுமக்களின் மீது காணப்படும் சுமைகள் உள்ளிட்ட நெருக்கடிகள் சம்பந்தமாக எல்லே குணவன்ச தேரருடனும் நீண்டநேரம் கலந்துரையாடினேன். அதற்கான தீர்வுகளைக் காண்பதுபற்றிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவைகள் அதிகரித்துள்ளன. அதுபற்றி தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றேன்.

எம்மைப்பொறுத் தவரையில் எந்த தேர்தலை நடத்தினாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். அதுமட்டுமன்றி நாம் எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் அதில் வெற்றி பெறுவோம். நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னமும் வயதுள்ளது. ஆகவே அவர் பற்றி பொறுமையாக உரையாடலாம் -என்றார்.

## மின் கட்டணத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்படும்என்றுகணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை மின்சார சபை விடுத்துள்ள கோரிக்கையில், மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையை ஈடு செய்யும் வகையில் கட்டண திருத்தத்திற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளிக்க வேண்டும்.

இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமற்போனதால், மின் உற்பத்திக்கு கூடுதல் செலவுஏற்படும்நிலைமைகள் உருவாகியுள்ளன.

குறிப்பாக, இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் நீர் மின் திறன்4500 கிகாவாட் ஆகும். எனினும் 3750 கிகாவாட் நீர் மின்உற்பத்தியைமாத்திரமே பெற முடியுமான இயலுமை உள்ளது.

அனல் மின் நிலையங்களிலிருந்து பற்றாக் குறையாகவுள்ள 750 கிகாவாட்நீர்மின்உற்பத்தியை பெறுவதற்கான கூடுதல் செலவைமீட்டெடுப்பதேமின் கட்டணத்தை அதிகரிப்பதன் நோக்கமாகும்.

ஆகவே உரிய கட்டண அதிகரிப்பைச்செய்வதன் ஊடாகவே நிலைமைகளை கையாளமுடியும்என்பதோடு நட்டத்தால் இலங்கை மின்சாரசபை முகங்கொடுக்கும்நெருக்கடிகளுக்கு தீர்வை காணமுடியும் என்றுள்ளது.

## உருவாகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து மீட்டெடுத்து முன்னோக்கிச் செல்வதாக இருந்தால் சர்வகட்சி கொள்கையிலிருந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட கட்டியெழுப்ப வேண்டும்.

இல்லையென்றால் நாட்டின் நிலைமை மிகவும் மோசமடையும். அதேநேரம் புதிய அரசியல் கூட்டணியை அமைப்பதற்காக பரந்துபட்ட அணியொன்று உள்ளது.

தற்போதைய நிலையில் அரசியல் கருத்துக்கள் தேவை யில்லை. நாட்டை கட்டியெழுப்புவதற்கான தேசிய வேலைத்திட்டமே அவசியமாகவுள்ளது. அந்தவகையில் சந்திரிகாவுடன் ஒருமித்த கருத்தினைஎட்டுவதற்குமுனைந்து வருகின்றோம். டலஸ் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் உள்ளார்கள்என்பதெல்லாம்இரகசியமானவை அவற்றை ஊடகங்களுக்கு கூறமுடியாதல்வா?

தற்போதைய நிலையில் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பதல்ல பிரச்சினை. ஆனால்நாட்டைமீட்கக்கூடிய அரசியல் சக்தியொன்றே ஆட்சிக்கு வரவேண்டும் என்றார்.

## மின் கட்டண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முவானது மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுமக்களிடம் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இந்தச்செயற்பாடு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் அதனையடுத்து தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை, பொதுபயன்பாடுகள் ஆணைக்குழுவானது இவ்வருடத்தில் மாத்திரம் மூன்றாவது தடவையாக மின்சாரக் கட்டணத்தினை அதிகரிப்பதற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

## அவதூறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதற்காகவோ அல்லது, குழுக்களின் உரிமைகளை கட்டப்படுத்தவதற்காகவோ கொண்டுவரப்படவில்லை.

சமூக ஊடகங்கள் வாயிலாக போலியான செய்திகள் பரப்புதல், அவதூறுகள் பரப்புதல், தனிமனிதர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தல், அகௌரவத்தை ஏற்படுத்தல், வெறுப்புப்பேச்சுக்களை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இச்செயற்பாடுகளை கட்டுப்படுத்தப்பட வேண்டிய தேவைஅவசியமாகவுள்ளது. இதன் மூலமாக சமூக ஊடகங்களையும், எதிர்கால சமூகத்தினையும் பாதுகாக்க முடியும் என்றே அரசாங்கம் கருதுகின்றது. அதனடிப்படையில் தான் நிகழ்நிலைக்காப்புசட்டமூலம் வரையப்பட்டுள்ளது என்றார்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தராதரங்கள் ஏனைய ஜனநாயக நாடுகளில் உள்ள சிறந்த நடைமுறைகளிற்கு ஏற்ப மாற்றியமைப்பது குறித்த தனது வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் பின்பற்றவேண்டுமென நாங்கள் வலியுறுத்துகின்றோம்

வலுவான சட்டமூலம் மூலம்சரியானசமநிலையை பேணுவது சட்டபூர்வமான ஒன்றுகூடலிற்குஅனுமதிப்பது சட்டஅமுலாக்கல் அதிகாரிகள் அச்சுறுத்தல்களைவலுவான விதத்தில் கையாளக்கூடிய விதத்தில் அவர்களை வலுப்படுத்துவது ஆகியவை அவசியமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா விவகாரம் தொடர்பில் யாழில் நேற்று செய்தியாளர்களிடம அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதித்துறையை சுதந்திரமாக செயற்பட வைக்க வேண்டும் என்பது ஓர் அரசினுடைய கடமையாகக் காணப்படுகின்றது. அதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் இருக்க முடியாது

ஆனால் இலங்கையில் நடைபெறுவது இவ்வாறான செயற்பாடுகள் அல்ல எல்லாமே ஒரு சிங்கள பௌத்த சிந்தனையில் மட்டுமே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

ஒரு தமிழருக்கு சார்பாக ஒரு தமிழ் நீதிபதி தீர்ப்பு கொடுத்தால் ஒரு முஸ்லிம் இற்கு சார்பாக ஒரு முஸ்லீம் நீதிபதி தீர்ப்புக் கொடுத்தால் சிங்களவர்கள் ஏதோ அவர்கள் தமிழர்களாக இருப்பதால்தான் இவ்வாறு தீர்ப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்று கூறுகின்றார்களே தவிர சிங்கள நீதிபதிகள் சிங்களவர்களுக்கு சார்பாக நீதிகொடுக்கின்றார்கள் என்று சிந்திப்பதில்லை.

இதில் நான் தெரிவிப்பது நீதிபதிகள் சட்டத்தின் படி நடக்கத்தான் அவர்களிற்கு நாங்கள் பயிற்சி கொடுத்திருக்கின்றோம். அவர்கள் அவ்வாறுதான் செய்கின்றார்களே தவிர அதில் தமிழர், சிங்களவர் என்று பாகுபாடு பார்த்து அவர்கள் இதனைச் செய்யவில்லை இவ்வாறு நினைப்பது பிழையான ஒரு சிந்தனையாகும்.

இந்த சிந்தனையில்தான் இவ்வாறு இந்த நீதிபதிக்கு நடந்திருக்கின்றது என்பதுக்கு தெரிகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த ஆட்சியாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் ஒன்றில் அவரை திரும்ப வரவழைத்துப் போதிய பாதுகாப்புக்கொடுத்து அவரை மீண்டும் அதே பதவியை வகிக்கச் செய்யலாம். இது நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கின்றதா என்பது தெரியவில்லை.

இவ்வாறான செயற்பாடுகளைகட்டுப்படுத்தாவிட்டால் இது சிங்கள மக்களிக்கு மிடையே இது மாதிரியான நிலைமைகள் ஏற்பட்டு பாரதூரமானவிளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

ஈஸ்ரர் தாக்குதலை எடுத்துப் பார்த்தோமாக இருந்தால் முஸ்லீம்களால் நடத்தப்பட்ட்தாக கூறுகின்றனர். ஆனால் உண் மையில் அவ்வாறு அல்ல. இது யாரோ ஒருவரின் அரசியலுக்காக இது ஒரு நாடகமாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதே இங்கு பிரதானமாகும்.

அனைத்தையும் தீர விசாரித்து செயற்பாடு வேண்டும் - என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர்
Kalaikkathir

# ஈழத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை இடைக்காலப் பரிந்துரைகள் கையளிப்பு

தமிழ்நாட்டில் அகதிகளாக நீண்ட காலம் தங்கியுள்ள ஈழத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழு தனது இடைக்கால அறிக்கையை முதலமைச்சர் மு.கா. ஸ்டாலினிடம் கையளித்துள்ளது. ஈழத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்குவதற்கான சட்டப் பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஈழத் தமிழ் அகதிகளுக்கான நீண்ட கால சட்டத் தீர்வுகள் அடங்கிய இந்த இடைக்கால அறிக்கையை அமைச்சரும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் முதலைமைச்சரிடம் கையளித்தார்.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையிலிருந்து புகலிடம் தேடி வந்த தமிழர்களை பாதுகாத்து அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு சுமார் 40 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில் இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால தேவைகள் மற்றும் தீர்வுகள், அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் கல்வி, எதிர்கால நலன் குறித்து ஆராய்ந்து அறிக்கை வழங்கவென ஒரு குழு முதல்வர் ஸ்டாலினால் நியமிக்கப்பட்டது. அதன் இடைக்கால அறிக்கையே முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான வழிகளை இடைக்கால அறிக்கை ஆராய்ந்து, அது தொடர்பாகச் சில பரிந்துரைகளையும் செய்துள்ளது.

தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வுகள் மற்றும் குடியுரிமைக்கான சட்டப் பாதைகள் குறித்த முக்கிய பரிந்துரைகள் இந்த இடைக்கால அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக முகாம்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை ஆய்வு செய்து, இது சம்பந்தமாக நீதித்துறையின் மதிப்பீட்டுகளுடன் இந்த பரிந்துரை களை செய்துள்ளோம் என ஆலோசனை குழுவின் சட்ட நிபுணர் மனுராஜ் சுண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார். குழுவானது குடியுரிமைக் கான பாதைகள், தமிழ்நாட்டில் இந்திய சமூகத்தில் அவர்களை ஒருங்கிணைப்பதற்கான படிகள் மற்றும் திருப்பி அனுப்பும் படிமுறை ஆகியவற்றை உள்ளடக்கிய பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

இந்த அறிக்கை தமிழகத்தில் குடியுரிமையின்றி வாழும் இலங்கையில் இருந்து சென்ற 5,000 இற்கும் மேற்பட்ட மலையகத் தமிழர்களுக்கும் இந்திய குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, பொதுத்துறை செயலாளர் நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் ஈழஎதிலியர் மறுவாழ்வு கழகத்தின் செயலாளர் சூரியகுமாரி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# நீதிபதியின் பதவி விலகல் குறித்து முழு விசாரணைக்கு ரணில் பணிப்பு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தனக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக கூறி பதவி விலகியமை தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தும்படி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.



தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி இதற்கு முன்னர் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொலிஸாரிடமோ அல்லது நீதி சேவைகள் ஆணைக்குழுவிடமோ அறிவிக்காத பின்னணியிலும், அது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தும்படி ஜனாதிபதி தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீதித்துறை, சட்டம் மற்றும் பாதுகாப்பு துறையின் பிரதானிகளுடன் பேச்சு நடத்தி, நீதிபதியின் பதவி விலகலுக்கான காரணங்களைக் கண்டறிந்து அதன் அறிக்கையை தனக்கு வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இந்த சம்பவம் தொடர்பாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்.

நீதிபதி சரவணராஜா தனக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக இதற்கு முன்னர் எவ்வித முறைப்பாடுகளையும் செய்யவில்லை எனவும் செப். 23 பதவி விலகல் கடிதத்தை நீதி சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்து விட்டு செப். 24 வெளிநாடு சென்றுள்ளார்

# 2030க்குள் இராணுவத்தினரை 1 லட்சமாகக் குறைக்க முடிவு

இலங்கை தரைப்படை உறுப்பினர்களின் எண்ணிக்கையை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சமாக குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டிருக்கும் இராணுவத்தின் எண்ணிக்கையை பாதிக்க குறைப்பது தற்போதைய ஆட்சியின் இலக்காக இருந்து வருகிறது.

2030ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சமாக குறைக்க இந்த ஆட்சி கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமீத பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதற்கு இணையாக கடற்படை மற்றும் விமானப்படையினரின் எண்ணிக்கையைக் குறைக்க தமது ஆட்சி எண்ணியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.ந

# மின் கட்டண உயர்வு குறித்து மக்கள் கருத்தை அறிய முடிவு

இலங்கை மின்சார சபையினால் இவ்வாண்டிற்காக முன்மொழியப்பட்ட மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் கருத்தைப் பெறுவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (ஊஷீளீறீஸி) தீர்மானித்துள்ளது.

2009 மின்சாரச் சட்டம் 20இன் பிரிவு 30க்கு இணங்க, விநியோக உரிமதாரரால் (இலங்கை மின்சாரம்) முன்மொழியப்பட்ட 2023ஆம் ஆண்டிற்கான மின்சாரக் கட்டணங்களைத் திருத்துவது தொடர்பாக பொதுக் கருத்தை (பங்குதாரர்களின் ஆலோசனை) பெற இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக பயன்பாட்டு ஒழுங்குமுறை அதிகாரியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2023ஆம் ஆண்டிற்கான உத்தேச 3ஆவது மின் கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் எழுத்துப்பூர்வ கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் ஒக்டோபர் 18 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இது தொடர்பான வாய்வழி பங்குதாரர்களின் ஆலோசனை ஒக்டோபர் 18 கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (யனிஞுளீக்ஷி) நடைபெறவுள்ளது.

வாய்வழி பங்குதாரர் ஆலோசனையில் பங்கேற்க முன் பதிவு செய்ய 071 862 2800 என்ற எண் மூலம் தொடர்புக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒன்றிய தலைவருடன் ஜேர்மனியில் ரணில் சந்தித்து பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் சார்ள்ஸ் மிசெலுக்கும் (ளீஜூழிஷயிளவினிஷ் உஜூளயி) இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு வியாழக்கிழமை பேர்லின் நகரில் இடம்பெற்றது. தேசிய பாதுகாப்பு தொடர் பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை மற்றும் வர்த்தக உறவுகள் தொடர்பில் இருதரப்பினரிடமும் முக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜேர்மனுக்கு உத்தியோகப்பூர்வ பயணமாகச் சென்றுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

# வெலிகந்த பொலிஸ் குடியிருப்பில் பொலிஸ் சார்ஜன்ட் சடலமாக மீட்பு

வெலிகந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பொலிஸ் குடியிருப்பில் சடலமாக மீட்கப்பட்டார்.

பொலிஸ் சார்ஜன்ட் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஏறவூர் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய அவரது இறப்புக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை..

வெலிகந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார். இந்த மரணம் ஏதேனும் விபத்தா அல்லது தற்கொலையா அல்லது கொலையா என இதுவரை தெரியவில்லை. பிரதேச குற்றப் புலனாய்வு அதிகாரிகள் சம்பவ இடத்தை சோதனை செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது - என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.



# நாடாளுமன்றம் மீண்டும் ஒக். 3 அன்று கூடுகிறது

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் செப்டெம்பர் 22 நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நாடாளுமன்றம் கூடும் அனைத்து நாட்களிலும் மு.ப 9.30 மணி முதல் 10.30 மணிவரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

2023 ஒக்டோபர் 3 மு.ப 10.30 மணி முதல் பி.ப. 5 மணிவரை குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு), மத்தியஸ்த (விசேட வகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சளளளளளளளளளளளளளளளளட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. அன்றையதினம் பி.ப 5 மணி முதல் 5.30 மணி வரை ஆளும் தரப்பினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

2023 ஒக்டோபர் 4ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.30 மணி முதல் பி.ப 5 மணிவரை சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட மூன்று தீர்மானங்கள் (2336/72, 2338/54 மற்றும் 2341/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டவை), விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (2332/14, 2332/53, 2337/16 மற்றும் 2340/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டவை) மற்றும் இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அன்று பி.ப 5 மணி முதல் பி.ப 5.30 மணிவரை ஒத்திப்புவேளையின் போதான இருவினாங்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 ஒக்டோபர் 5 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.30 மணி முதல் பி.ப 5 மணி வரை இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. பி.ப 5 மணி முதல் 5.30 மணி வரை ஆளும் தரப்பினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

2023 ஒக்டோபர் 6 வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் 'பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில்வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை தொடர்பான ஒத்திவைப்பு விவாதம்' நடத்தப்படவிருப்பதாகப் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மூத்தோர் பற்றிச் சிந்திப்போம்

ஐப்பசி முதல் நாள் இலங்கையில் சிறுவர் மற்றும் முதியோர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. நாட்டின் எதிர்காலமான சிறுவர்களுக்கான தினமாக இருக்கும் அதேவேளை எதிர்காலத்திற்கு நிகராக கடந்த காலத்தையும் மதிக்கவும் போற்றவும் வேண்டியதன்அவசியம்கருதிசிறுவர்மற்றும்மூத்தோர் தினங்களை ஒரே நாளில் வைத்திருக்கின்றோம்.

இலங்கையில்எதிர்காலச்சிறுவர்களுக்குநிகராக மூத்தோர்மீதும்அதிகஅக்கறையும்கவனமும்செலுத்த வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். ஏனெனில் இலங்கையின் சனத்தொகையில் கணிசமான பகுதி மூத்தவர்களாலேயே நிரப்பப்படுகின்றது. 2000ஆம் ஆண்டில் நாட்டின் சனத் தொகையில் 9.3 சதவீதமாக இருந்த மூத்தோரின் எண்ணிக்கை 2050ஆம் ஆண்டில் – அதாவது இன்னும் 27 ஆண்டுகளில் – 27.6 சதவீதமாக வளர்ச்சியடைந்துவிடும் என்று கணிப்புக்கள் கூறுகின்றன.

2 கோடி 22 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கையில் தற்போது சுமார் 30 லட்சம் பேர் முதியவர்கள். 60 வயதைக் கடந்தவர்கள். பணிநிலைகளில்இருந்துஓய்வுபெற்றவர்கள். இதுவே 2050ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 60 லட்சமாகிவிடும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. சுகாதாரத் துறையின் மேம்பாடு, ஆரோக்கியம் என்பவற்றின் காரணமாக இலங்கையர்களின் சராசரி வயது 73க்கும் அதிகம். அதிலும் பெண்களின் சராசரி வயது 76க்கும் அதிகம். ஆக ஒய்வு நிலைக்குப் பின்னரும் ஒவ்வொரு மனிதனும் சராசரியாக 15 ஆண்டுகளுக்குகுறையாதுவாழக்கூடியநிலைதான் இன்றிருக்கின்றது.

இனிவரும் காலங்களில் இதுவும் அதிகரிக்கும். அப்படிப்பட்ட நிலையில் மூத்தோரைக் கையாள்வதற்கும்அவர்களைசமூகத்தில்மகிழ்வோடு வைத்துக்கொள்வதற்கும் ஏற்ற தயார்ப்படுத்தல்கள் உள்ளனவா என்று கேட்டால் இன்றைய பதில் இல்லை என்பதுதான். பணிநிலை ஓய்வு வயதிற்குப் பின்னரும் பலரால் தொடர்ந்தும் பணியாற்றக்கூடிய தேக மற்றும் மன ஆரோக்கியத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்கிறபோதும்அவர்களுக்குஅதற்கானவாய்ப்புக்கள் இல்லாமல் வீடுகளில் முடக்கப்படுகின்றார்கள். ஓய்வுக்குப் பின்னர் என்ன செய்வது என்பது இன்று ஓய்வுபெறுபவர்களில் பெரும்பாலானவர்களின் கேள்வியாக இருக்கின்றது.

இந்தப் பிரச்சினையை அணுகி மூத்தோர்களுக்கு உரிய திட்டங்களையும் எதிர்காலத்தையும் உருவாக்கவேண்டியிருக்கின்றது. இதன் மீது அரசு பெரும் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. வளர்ந்த நாடுகளில் இந்த விடயம் நன்கு கையாளப்படுகின்றது. ஆனால், இலங்கையில் பல சமயங்களில் மூத்தவர்கள் ஆதரிப்பார் இன்றி அந்தரப்படும்நிலைஏற்படுவதையும்காணமுடிகின்றது. இங்குள்ள அரச முதியோர் இல்லங்கள் சராசரி இலங்கையர் ஒருவர் வாழக்கூடிய தரத்திலும் குறைவான தரத்திலேயே வாழக்கூடியதாக இருக்கின்றது.

மூத்தவர்கள் அவர்களது குடும்பங்களுடனேயே எப்போதும் இருப்பது என்பதும் இந்தக் கால கட்டத்தில்சாத்தியமானதல்ல. அத்தகையநிலையில் அவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்கக்கூடிய வகையிலான திட்டங்கள் மீதும் அவர்களைத் தொடர்ந்தும்சமூகத்திற்குப்பயனுறுதிமிக்கவர்களாக சமூகத்துடன் கலந்துறவாடக்கூடிய வகையில் எப்படி வைத்திருப்பது என்பது தொடர்பிலும் அரசு இப்போதே செயற்படத் தொடங்கவேண்டும்.

# ஆசிரியர்களை உருவாக்கும் தனித்துவப் பயணத்தின் நூற்றாண்டு



இலங்கையைப் பொறுத்த வரை யில் ஆசிரியர்கள் பல வகைகளில் நியமனம் பெறு கிறார்கள். அவர்களின் நியம னங்களுக்கு ஏற்றவகையில் அவர்களுக்கான தொழில் வாண்மைப் பயற்சிகள் வழங் கப்படுகின்றன.

ஆசிரியர்களாக நியமனம் பெற்ற, பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு உரிய வாண்மைத்துவப் பயிற் சிகளை வழங்கி பயிற்சிச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களாக ஆசிரியர் கலாசாலைகள் செயற்பட்டு வரு கின்றன. இன்று இலங்கையில் சிங்கள மொழி மூலமான நான்கு கலாசாலைகளும் தமிழ் மொழி மூலமான நான்கு கலாசாலைகளும் என எட்டு ஆசிரியர் கலாசாலைகள் இயங்கி வருகின்றன.

அவற்றுள் மூத்த கலாசாலை யாக விளங்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இன்று ஒக்டோபர் முதலாம் நாள் நூற்றாண்டை நிறைவுசெய்து, தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமாகத் தலைநிமிர்ந்து நிற் கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் கல்வியில் மிசனரி மாரின் செல்வாக்கே மேலோங் கியிருந்தது. மிசனரிமாரால் நடத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் கிறிஸ் தவர்களையே பயிற் சிக்காக உள்வாங்கிக்கொண்டன. ச.அருணாசலம் என்பவர் 1880களில், சைவ சமயத்தவராக இருந்துகொண்டே ஆசிரிய பயிற்சியைப் பெற விரும்பி முயற் சித்தாராயினும் அது சாத்திய மாகவில்லை.

ச.அருணாசலம் பின்னாளில் நாவலர் வழியில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்துடன் கல்வி வழங்குவ தற்காகப் பணி யாற்றியவர். அவர் சைவ சம யத்தவர்கள் பயிற்சி பெறத்தக்க கலாசாலையைநிறுவமுயன்றார். தனது ஊரான காரைநகரில் ஒரு சைவாசிரிய கலாசாலையை நிறுவினாராயினும் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்க வில்லை. தொடர்ந்து கீரிமலை ஏரம்பர் மடத்திலும் பின்னர் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை யின் ஒரு பகுதியிலும் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் நிறுவப் பட்டு சில காலம் இயங்கின என்றாலும் பல்வேறு காரணங்க ளினால் அவற்றாலும் அரச அங் கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

தனது முயற்சியில் தளராத வரான ச.அருணாசலம், கோப்பாயைச்சேர்ந்த சு. இராசரத்தி னத்தினத்தின் (பின்னாட்களில் இந்துபோர்ட் இராசரத்தினம் என அறியப்பட்டவர்) தொடர்பினால் கோப்பாயில் சைவாசிரிய கலாசா லையை நிறுவ முயன்றார். அதன் விளைவாக, சு.இராசரத்தி னம், மு.சுவாமிநாதன் (இவரே கோப்பாய் சரஸ்வதி வித்தியா சாலையின் ஸ்தாபகர்), டாக்டர் கி. சுப்பிரமணியம் ஆகியோரது உழைப்பினால் கோப்பாய் நாவலடியில் 'ஐக்கிய போதனா ஆசிரிய கலாசாலை' 1916இல் இயங்கத் தொடங்கியது. எனினும் இடவசதிப் பற்றாக் குறையைக் காரணங்காட்டி அரச அங்கீகாரம் மறுக்கப்பட்டது.

பின்னர் சேர். பொன். இராம நாதன் அவர்கள் இருபாலை யிலிருந்த தனது நிலத்தின் (இந்து சர்வகலாசாலை அமைக்கும் நோக்கில் வைத்திருந்த சத்தியபா மாத் தோட்டத்தின்) ஒரு பகுதியை உபகரிக்க முன்வந்தமையைத் தொடர்ந்து, இன்று கோப்பாய் ஆசி ரிய கலாசாலை அமைந்துள்ள இடத்தில் சைவாசிரிய கலாசாலை செயற்படத் தொடங்கியது.

அருணாசலம் அவர்களின் 'சைவா சிரிய கலாசாலை' என்ற கனவு, சு. இராசரத்தி னம், மு.சுவாமிநாதன், டாக்டர் கி. சுப்பிரமணியம் ஆகியோரது உழைப்பினாலும் சேர். பொன். இராமநாதனின் வாண்மை யினாலும் மெய்ப்பட்டு, உருவா கிய கலாசாலையே அரச அங்கீகாரம்பெற்று 'யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி' என்ற பெயரில் 01.10.1923 முதல் செயற்படத் தொடங்கியது.

இது தொடர்பாக செய்தி வெளியிட்ட இந்து சாதனம் (20.09.1923), 'மினரிமாரும் சைவர்களும் சேர்ந்து இதுகாறும் நடத்தி வந்த கோப்பாய் ஆசிரியர் வித்தியாசாலை வருகிற ஒக்டோ பர் மாசம் முதல் நாள் தொடக்கம் அரசினர் பொறுப்பில் எடுக்கப் பட்டு, யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி என்னும் பெயருடன் வழங்கிவரும்' எனக்குறிப்பிட்டது.

இக்கல்லூரி ஆண்களுக்கான கல்லூரியாகச் செயற்பட்டது. கல்லூரியின் முதலாவது அதிபராக அ. பொன்னையா பொறுப்பேற்றுக் கொண்டார். 1947 முதல் 'கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை'யாக மாறி பெண்களுக்கு மட்டும் பயிற்சியளித்தாலும் 1977ஆம் ஆண்டு முதல் இருபாலாருக்கு மான கலாசாலையாகச் செயற் பட்டுவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் 1947இல் நிறுவப்பட்டு செயற்பட்டுவந்த பலாலி ஆசிரிய கலாசாலை 2012ஆம் ஆண்டு நிரந்தர மாக மூடப்பட்டு, கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் இணைக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடங் கப்பட்டது இக்கலாசாலை வளாகத்திலேயே ஆகும். கல் வியியல் கல்லூரியைத் தன் குழந்தையாகத் தன் மடியில் தவழவிட்ட தாய் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்றால் மிகையில்லை.

பாரம்பரியமானதும் விசால மானதுமான கட்டடத்தில் இயங்கிவரும் இக்கலாசாலை பார்வையாளர் அரங்குடன் கூடிய மைதானத்தைக் கொண்டுள்ளது. ஆசிரிய மாணவர்களின் வழி பாட்டிற்காகக் கலாசாலை வளாகத்தில் அமைந்திருந்த யோக மண்டபம் 2014ஆம் ஆண்டில் ஆலயமாக பரி மாணம்பெற்றுள்ளது. அன்னைம ரியாள் சிற்றாலயமும் கலா சாலை வளாகத்தில் உள்ளது. 1971இல் அமைக்கப்பட்ட 'கிருஷ்ணை படிப்பகம்' கலாசாலையின் நூல கமாக ஏழாயிரத்திற்கும் அதிக மான நூல்களுடன் பயன்பட்டு வருகின்றது. கலைகளை வளர்க் கும் மையமாக இரதிலக்சுமி மண் டபம் செயற்பட்டுவருகின்றது. பழைய விடுதிக் கட்டடம் சேதம டைந்தமையால் புதிதாக விசால மான விடுதிக் கட்டடம் அமை க்கப் பட்டுள்ளது. நூற்றாண்டை யொட்டி திறன் வகுப்பறை யொன்றும் கலாசாலையில் அமை க்கப்பட்டுள்ளது.

கலாசாலையில் காலத்திற்குக் காலம் பல்வேறு மன்றங்கள் செயற்பட்டு வந்தாலும் முத்தமிழ் மன்றம், இந்துமன்றம், உடலாளர் மன்றம், நுண்கலை மன்றம், ஆங்கில மன்றம் என்பன நீண்ட பாரம்பரியத்துடன் செயலாற்றி வருகின்றன. அருணா இல்லம், சுவர்ணா இல்லம், ராதா இல்லம், காவேரி இல்லம் ஆகிய இல் லங்களாக ஆசிரிய மாணவர்கள்

(5ஆம் பக்கம் பார்க்க...)



ச.அருணாசலம்



இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்கள்



சேர். பொன் இராமநாதன்



ச லலீசன் (கலாசாலை அதிபர்)

காலைக்கதிர் Kalaikkathir

# காணாமற்போன பெண்ணின் சடலும் சியம்பலாபேயில் மீட்பு

மூன்று நாள்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது நீண்ட கால நண்பரான வர்த்தகர் ஒருவர் வெளிநாட்டுக்குச்செல்வதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அங்கொடையைச்சேர்ந்த 51 வயதான பிரதீபா என்ற பெண்ணை செப். 27 காலை முதல் காணவில்லை என அவரது மகள் முல்லேரியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அந்தப் பெண் அங்கொடையில் இருந்து கடுவெலைக்கு நீல நிற முச்சக்கரவண்டியில் சென்றமையைக் கண்டுபிடித்தனர்.

பின்னர் கடு வெலவில் உள்ள பல சரக்குக் கடை ஒன்றின் முன் நின்றிருந்த காரில் அவர் ஏறும் சிசிரிவி காட்சிகளையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

லுணு3030என்றசாம்பல் நிற காரில் அவர் புறப்பட்டுச் சென்றதை அவதானித்த பொலிஸார் அந்த கார் குறித்து விசாரித்து அதன் உரிமையாளரை அடையாளம் கண்டனர். அது சியம்பலாப்பே பிரதசத்தை சேர்ந்த வர்த்தகர் சுதீர வசந்தஎன்பவருடையதுஎனத் தெரியவந்துள்ளது.

காணாமற்போன பெண்ணுக்கும்இந்தவர்த்தகருக்கும் சுமார் 20 வருடங்களாக நெருக்கமான உறவு இருந்து வந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக இருவருக்கும் இடையில் பணத் தகறாறு காட்டப்பட்டது என்றும்அவர்கள்தெரிவிக்கின்றனர்.

சியாம்பலாப்பே பகுதியில் வர்த்தகருக்குச் சொந்தமான கைவிடப்பட்ட வீடு ஒன்றை பொலிஸார் சோதனையிட்ட போது, ஒரு அறைக்குள் நீண்ட முடி மற்றும் குருதிக் கறைகள் காணப்பட்டுள்ளன. வீட்டின் வெளியே பகுதியளவு எரிந்த நிலையில் குருதிக் கறையுடன்கூடியபெண்களின் ஆடைப் பாகங்களும் காணப்பட்டுள்ளன.

இதுதொடர்பில்சபுகஸ்கந்த பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, குறித்த வீட்டில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் களனிகங்கைகரையில்தலை மற்றும் கைகால்கள் இல்லாத பெண் ஒரு வரின் சடலத்தை அவர்கள்கண்டுபிடித்தனர். அது பிரதீபாவின் சடலம் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து 55 வயதான வர்த்தகர் சுதீர வசந்தவுக்குவெளிநாட்டுபயண தடை விதிக்கப்பட்டுள்ளது.

# தண்ணீர் தொட்டியில் வீழ்ந்து கிளிநொச்சியில் சிறுமி இறப்பு

கிளிநொச்சி செல்வநகரில் தண்ணீர் தொட்டியில் விழுந்து சிறுமி ஒருத்தி உயிரிழந்துள்ளார்.

இரண்டு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தபோது வீட்டின் அருகில் உள்ள தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து சிறுமி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுமி ஒரு வயதும் 3 மாதமும் நிறைவடைந்தவ். தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஹபராதுவ, கடலுவ பாலத்திற்கு அருகில் உள்ள வாவியில் நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காணாமல் போன 14 வயது சிறுவனை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வரகாபொல பிரதேசத்தைச் சேர்ந்த குழுவினருடன் சுற்றுலாவிற்கு சென்றிருந்த போதே குறித்த சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசிரியர்களை உருவாக்கும்..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

பிரிந்து பல்வேறு போட்டிகளிலும் பங்கேற்று வருகிறார்கள். ஆண்டுதோறும் வெளிவரும் 'கலைமலர்' கலாசாலை மாணவர்களது எழுத்தாற்றலை வெளிப்படுத்துகிறது.

கலாசாலையின் அதிபர்களாக அ.பொன்னையா, ஆ.இ.ண்முகரத்தினம், ஞானம் முருகேசு, இரதிலக்சுமி ஆனந்தக்குமாரசாமி, சத்தியமலர் சின்னப்பு, வை.கா.சிவப்பிரகாசம், சிவயோகநாயகி இராமநாதன், கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை, மு.பரஞ்சோதி, ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி, மலர் சின்னையா, கைத்தன் பேர்னாட், வே.கா.கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம் ஆகியோர் பதவி வகித்து, கலாசாலையின் வளர்ச்சியில் பங்களித்துள்ளனர்.

நூற்றாண்டுநிறைக்கும்தருணத்தில்கலாசாலையின் அதிபராக சைவத் தமிழறிஞர் செந்தமிழச்; சொல்லருவி ச.லலீசன்சிறப்புடன்செயலாற்றிவருகிறார். இவ்வாண்டில் கலாசாலையில்ஏற்பட்டுள்ளமாற்றங்களும்விருத்திகளும் அதிபரின் ஆளுமைக்குச் சான்றுபகர்வன. இந்த நூறு ஆண்டுகளில் ஆற்றலும் ஆளுமையும் சமூக மதிப்புமுடைய பல கல்வியாளர்கள் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள்; கடமையாற்றிவருகிறார்கள்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தனது நூறாண்டுப் பயணத்தில், பல நூற்றுக்கணக்கான ஆற்றல்மிகு ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது. பல்துறை ஆற்றலாளர்களைக் கல்விச் சமூகத்துடன் இணைத்துள்ளது. அவர்கள் ஆசிரியர்களாக மட்டுமன்றி அதிபர்களாக, கல்வியதிகாரிகளாக, விரிவுரையாளர்களாக, நிர்வாகசேவை அதிகாரிகளாக என உயர்ந்து பல நிலைகளிலும் பணியாற்றியுள்ளார்கள்; பணியாற்றிவருகிறார்கள்.

இலங்கையின் தமிழ் மொழி மூலக் கல்வி வளர்ச்சியில் கோப்பாய் ஆசிரியர் கலாசலையின் பங்கு நிராகரிக்க முடியாதது. அதுமட்டுமன்றி இசைக்கலைஞர்களாக, நடனக்கலைஞர்களாக, பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக எனப் பல்வேறு தளங்களிலும் கலாசாலையின் குழந் தைகள் முத்திரை பதித்துள்ளார்கள்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் குறிப்பாக தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் தடம்பதித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, நூற்றாண்டைக் கடந்து தலைநிமிர்ந்துள்ளது.

இனிவருங்காலங்களிலும் கலாசாலை தனது நிகரற்ற பணியினால் எமது கல்வி வளர்ச்சியில் பணியாற்றும் என நம்பலாம்.

சிவகுருநாதன் கேசவன்
(பழைய மாணவன்)
விரிவுரையாளர், சியன தேசிய
கல்வியியற் கல்லூரி.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## முல்லைத்தீவு நீதிபதி விவகாரம்

# முழுமையான விசாரணை அவசியம்

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்து

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள்முக்கியபங்குவகிக்கின்றனர். எனவே, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் தான் பேசுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறிய விவகாரம் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பணியாற்றிய நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் குறித்து நான் மிகவும் கவலை அடைந்துள்ளேன். 'குருந்தூர்' மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு அவருக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள விவகாரம் நீதித்துறையின் நிலை குறித்து கேள்வியை உருவாக்கியுள்ளது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தலானது நீதி மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான அச்சுறுத்தலாகும். எனவே, நேர்மையுடன் நீதி வழங்குபவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு ஆதரவளிப்பதும் நமது கூட்டுப் பொறுப்பாகும்.

மேற்படிசம்பவம்தொடர்பில்முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைக்கு அழைப்பு விடுக்கும் தரப்புகளுடன் நானும் இணைகிறேன். உண்மை கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



குருந்தூர்மலை வழக்கில் மட்டுமல்ல, நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாப்பதையும், நீதி நிலைநாட்டப்படுவதையும் உறுதி செய்யவேண்டும்.- என்றார்.

## நண்பர்களுடன் நீராடச் சென்ற 14 வயதுச் சிறுவன் மாயம்

சுற்றுலாவுக்காகச் சென்ற 14 வயது சிறுவன் ஒருவன் கொக்கல கடலில் சக நண்பர்களுடன் நீராடச் சென்றபோது வெள்ளிக்கிழமை மாலை காணாமல்போயுள்ளார் என ஹபராதுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வரக்காப்பொல பிரதேசத்தில் மில்லகஹதொல கணித்தபுர பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிவ ஆகாஷ் என்ற சிறுவனே காணாமற்போயுள்ளார்.

சிறுவனைத்தேடும்முயற்சியில் கடற்படை வீரர்கள் மற்றும் அப்பிரதேசமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்துக்கு முன் நேற்றைய தினம் பிற்பகல் கொக்கலை கடலில் நீராடச்சென்ற வெளிநாட்டுநபர் ஒருவரும் கடலில் மூழ்கி, அப்பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டு சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெரிக்கக் குடியுரிமையை கைவிட பஸில் தயாரில்லை

அமெரிக்க குடியுரிமையை கைவிடபோவதில்லை என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் தான் இதே நிலைப்பாட்டிலேயே இருந்து வந்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும்ஜனாதிபதித்தேர்தலில்ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றாலும் பஸில் ராஜபக் ஷவின் பெயரும் அதில் அடிபடுகின்றது.

''மழைப்பெய்தால், குளம் நிரம்பும் போன்ற நிலைமையேதற்போதுகாணப்படுகிறது. எவ்வாறாயினும் கட்சி என்ற வகையில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும்என்றபலமானயோசனை முன்வைக்கப்பட்டு வருகிறது. எனினும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தப்பட போகும் வேட்பாளர் யார் என்பதை இதுவரை தீர்மானிக்கவில்லை'' எனவும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக் ஷ தனது அமெரிக்க குடியுரிமையை கைவிட்டு, இலங்கையின் அரசியலில் நேரடியாக பங்குப்பற்றுவார் என அந்த கட்சியினர் மத்தியில் பேசப்பட்டு வந்தது.

இலங்கையின் சட்டத்திற்கு அமைய இரட்டை குடியுரிமையைகொண்டுள்ளபசில்ராஜபக்சஇலங்கையில் அரசியல் ரீதியான அதிகார பதவிகளையோ, அரச உயர் பதவிகளையோ வகிக்க முடியாது.

இந்த நிலையிலேயே அமெரிக்க குடியுரிமையை கைவிடப் போவதில்லை என பசில் ராஜபக்ச மீண்டும் கூறியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

## கருத்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இச் சட்டமூலத்தின் பல விதிகள், தகவல் மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட நாட்டில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களைப் பயன்படுத்துவதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக அமைகின்றது.

குறிப்பாக நிகழ்நிலை பாதுகாப்பு ஆணையகம் மற்றும் நிபுணர்களின் அமைப்பு, நியமனம் மற்றும் செயற்பாடுகள், தண்டனைக்குரிய குற்றங் கள் சமச்சீரற்ற தடைகள்என்றுதெளிவற்றதும் மற்றம் மிகைப்படுத்தப்பட்ட உள்ளீடுகளையும் கொண்டிருப்பது கவலைக்குரியதாகும்.

நிகழ்நிலையில் வெறுப்பு -பேச்சுமற்றும்தவறானதகவல்களின் பரவலைக் கையாள வேண்டுமென்கின்றபோதும் அவ்விடயங்கள் தொடர்பில் சட்டமூலத்தின் உள்ளடக்க வடிவமைப்பில் ஆழமான குறைபாடுகள்காணப்படுகின்றன.

இதனால், கருத் துச் சுதந்திரத்தைநிலைநிறுத்தத்தவறிய இலங்கை அரசாங்கத்தின் துஷ்பிரயோகத்திற்குத் இச்சட்டமூலமும் வாசலைத் திறந்து விடுவதாக கருத வேண்டியுள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறுமாறும்,'சமூகத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்'சட்டமூலங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சகல பங்குதாரர்களுடனும் அர்த்தமுள்ள ஆலோசனைகளை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளது.

அதனடிப்படையில், தற்போதைய வரைவு உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான சட்டபூர்வமான தன்மையைக் கொண்டிருப்பதால் அடிப்படைத் தேவைகள் மற்றும் மக்கள் சார்ந்த கொள்கைகளை பின்பற்றத் தவறிவிட்டது.

கருத்துச்சுதந்திரம்,தகவல் சுதந்திரத்தைஉறுதிப்படுத்தும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு ஏற்ப அது திரும்பப் பெறப்படவேண்டும்அல்லது திருத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

மாறாக மனித உரிமைகளை அச்சுறுத்தும் வகையில்முன்மொழியப்பட்டு நடைமுறையில் உள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்மீதானசர்வதேச உடன்படிக்கை, பயங்கரவாத தடைச்சட்டம்ஆகியவற்றுக்கு மேலதிகமாக சிவில் சமூகங்களைகட்டுப்படுத்தும் ஒன்றாக மாறுவதோடு அரசின் எல்லையை தேவையற்ற முறையில் விரிவுபடுத்துவதற்கும் உதவுவதாக அமையும்.

இலங்கைஅரசமைப்பின் உறுப்புரை14 பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை உறுதி செய்கிறது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 19, இலும் இலங்கை ஒரு பங்காளராக உள்ளது,

ஆகவே, சமூக ஊடகங்களில் பகிரப்படும் வெறுப்பூட்டும் பேச்சுகள் மற்றும் தவறானபதிவுகளைகட்டுப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தில் ஆழ மான குறைபாடுகள் காணப்படுகின்றன.

கருத்து சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தவறி வரும் சூழலில், இவ்வாறானதொருசட்டமூலம் தவறான முறையில் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்புகளை கொண்டிருக்கின்றது.

அரசின் நடத்தை மற்றும் கொள்கைகள் தொடர்பான மக்களின் விவாதத்தை நசுக்குவதற்கு இந்த சட்ட மூலம் பயன்படுத்தப்படும் அபாயம் இருக்கின்றது - என்றுள்ளது.

## மக்களுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளப்போகின்றனர்.

தற்போது மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப் படவுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. அதுமட்டமன்றி, நாட்டின்வளங்கள்விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு ஆட்சியொன்றைமுன்னெடுக்கின்றபோது நாட்டில் மிஞ்சப்போவது என்னவென்ற கேள்வி உள்ளது. நாட்டில் பசியால் வாடும் சிறுவர்கள் உள்ளிட்ட மக்கள் தொகையினர் உள்ளனர். நாட்டின் கடன்கள் உரியவாறு மீளச் செலுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தங்கியுள்ளனர். இதற்கானபணம்யாருடையது. அவர்களுக்கான செலவீனங்களைச் செய்வது யார்?

ஆகவேஇந்தவிடயங்கள் தொடர்பான தமதமின்றி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான பொறுப்பினை முன்னாள் ஜனாதிபதி கையிலெடுத்துச் செயற்பட வேண்டுமென கோரியுள்ளேன் -என்றார்.

## இனங்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களைப்பேசஆரம்பித்துள்ளனர்.

குருந்தூர்மலை விடயத்தை மையப்ப டுத்தி கஜேந்திரகுமாரின் கொழும்பு இல்லத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன் மூலம் தீயிடுவதற்கு முயற்சித்தார்கள். அது நடைபெறவில்லை.

நனைந்த தீப்பெட்டியை வைத்து இனங்களுக்கு இடையில் தீயை மூட்டுவதே அவர்களது இலக்காக இருந்தது. ஆனால் அது வெற்றி பெறவில்லை.

தற்போது முல் லைத்தீவு நீதிபதி சரவணராஜா, அவர் வழங்கிய தீர்ப்புக்காக அச்சுறுத்தப்பட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். அது தொடர்பில் அவர் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பு தமக்கு எதிராக உள்ளது என்பதால் அச்சுறுத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது என்றால் நாடு எங்கேயிருக்கின்றது என்று பாருங்கள்.

போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் மக்கள் தேசிய நல்லிணக்கத்தினை எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் அதனை விரும்புவதில்லை. அவர்கள் எப்போது பிரிவினையையே எதிர்பார்க்கின்றார்கள்.

அதுமட்மன்றி ஆட்சியாளர்கள் அடக்குமுறையையேபிரதானஇலக்காக கொண்டுள்ளார்கள். அரசகல மக்கள் போராட்டத்திற்கு காரணமாக இருந்தது சமூக ஊடகங்கள் தான். பஷில் பஷில் என்கின்றபோது கபுடா கபுடா என்பதையும் கோட்டாபயவை விரட்டும் 9ஆம் திகதி புரட்சிக்கான அழைப்பையும் சமூக ஊடகங்களே செய்தன.

ஆகவே அரசாங்கம் தற்போது சமூக ஊடகங்களை முடக்குவதற்கு முனைகின்றன. அதற்கான சட்டமூலத்தினை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருகின்றன. அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை - என்றார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2023இல் வெளியிடப்பெற்றது.